திரு. தாமரைக்கனி பேசிவிட்டார். (குறுக்கீடு) நீங்கள் ஒழுங்காக உட்காரப் போகிறீர்களா? வெளியேற்றவா? மாண்புமிகு முதலமைச்சர்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 ஆம் தேதி நடைபெற இருக்கின்ற ஒரு இரயில்வே துறை நிகழ்ச்சிக்காக அளிக்கப்பட்டுள்ள அழைப்பிதழ் குறித்து மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பி, அதைத் தொடர்ந்து நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், சுப்பராயன் அவர்களும் கருத்தை ஏற்று இங்கே பேசியிருக்கின்றார்கள். இடையில் பாரதிய ஜனதா கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் வேறு ஒரு கருத்தை இங்கே குறிப்பிட்டு அந்த அழைப்பிதழில் எந்தத் தவறும் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். சுப்பராயன் எழுப்பிய பிரச்சினை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிய அந்தக் கருத்து இவையெல்லாம் இந்திய நாட்டை ஒரு மதச்சார்பற்ற நிலையிலே காண வேண்டும், அவ்வாறு இயங்க வேண்டும், எந்த ஆட்சியானாலும் அந்த ஒரு நிலையிலிருந்து மாறுபடக்கூடிய ஒரு நிலை இப்போது ஏற்படுகிறதோ என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள் இப்போது மேற்கொள்ளப்படுகின்றன என்ற அந்த உண்மையையும் விளக்குவனவாகத் தென்படுகின்றன. இதை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு மதச்சார்பற்ற நிலையை இந்தத் துணைக் கண்டத்திலே உருவாக்க வேண்டும் என்று எண்ணுகின்ற ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும். அந்தக் கடமையை நாம் நிறைவேற்றத் தவறினால் எதிர்காலத்திற்கு நாம் பதில் அளிக்க வேண்டியது மாத்திரமல்ல, எதிர்காலச் சந்ததியனரின் கோபத்திற்கும், சாபத்திற்கும்கூட ஆளாக வேண்டியவர்களாக ஆகி விடுவோம்.

இது இரயில்வே விழாவினுடைய அழைப்பிதழில் சங்கராச்சாரியார் அவர்களுடைய பெயர் குறிப்பிட்டிருப்பது பற்றிய பிரச்சினை. எதிர்க்கட்சித் தலைவரும், சுப்பராயன் அவர்களும் இங்கே அழுத்தந்திருத்தமாக எடுத்துக்காட்டியது போல் சங்கராச்சாரியாரிடத்திலே நமக்கு எந்தவிதமான பகையும் கிடையாது; வெறுப்பும் கிடையாது. எல்லா மதங்களிலேயும் இருக்கின்ற குருமார்கள், பெரியவர்கள் ஆகியோரிடத்திலே என்ன மதிப்பு வைத்திருக்கின்றோமோ, அதே மதிப்பு சங்கராச்சாரியாரிடத்திலும்

அவருடைய அடுத்த நிலையிலே உள்ளவரிடத்திலும் நமக்கு உண்டு. ஆனால் அப்படி மதிப்பது என்பது வேறு; அதேநேரத்தில் ஒரு அரசு நிகழ்ச்சியில் மதத்தைக் கொண்டு வந்து புகுத்துவது என்பதை ஏற்பதா, இல்லையா என்பது வேறு. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அந்தக் கழகத்தினால் நடத்தப்படுகின்ற இந்த அரசைப் பொறுத்தவரையில் ஒருக்காலும் மதச்சார்பற்ற நிலைக்கு மாறாக எந்த நடவடிக்கையாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளாது என்பதை நான் திட்டவட்டாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மதச்சார்புடையவர்கள் அதிலே கலந்துகொள்ள வேண்டுமென்று ஒருவேளை இரயில்வே துறையினர், டெல்லியிலே இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் அல்லது இங்கேயிருக்கின்ற இரயில்வே துறை அதிகாரிகள் விரும்பியிருந்தால் அதிலே ஒரு இஸ்லாமிய மார்க்கத்தினுடைய பெரியவரையும் கலந்துகொள்ளச் செய்திருக்கலாம். ஒரு கிருத்துவ பேராயரையும், ஆர்ச் பிஷப்பையும் அழைத்து அதிலே கலந்துகொள்கின்ற வாய்ப்பினை அவர்களுக்கு அளித்திருக்கலாம். அப்போது மதச்சார்பற்ற முறையிலே எல்லா மதத்தினரும் கலந்து, வேலாயுதன் சொல்வதைப் போல மதகுருமார்களுடைய அருளும் இரயில்வேக்கு வேண்டும் என்பதற்காக, அப்போதுதான் விபத்துக்கள் எதுவும் நடக்காமல் இருக்கும் என்ற முறையிலே (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா மதகுருமார்களையும் கலந்துகொள்ளச் செய்திருக்கலாம். அப்படி இல்லாமல் சங்கராச்சாரியாரை மாத்திரம் அழைப்பது என்பது இன்றைக்கு பா.ஜ.க. மீது தொடர்ந்து சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுக்கு அவர்கள் தங்களை இலக்காக்கிக் கொள்கிறார்கள் என்பதைத் தவிர வேறு இல்லை. இதிலே நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் பொன்முடி பெயர் இருக்கிறது என்று சுப்பராயன் குறிப்பிட்டார். இந்த அவையிலேயே அதற்கு ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார், சங்கராச்சாரியார் பெயர் போட்டிருப்பதற்காக. தீர்மானம் தேவையில்லை. இந்த அவையினுடைய ஒட்டுமொத்தக் கருத்தாக நான் சொல்கின்றேன். யாராவது இதிலே தவறு இருந்தால், அந்தக் கருத்திற்கு உடன்பாடு இல்லையென்று கூறலாம் - ஒட்டுமொத்தக் கருத்தாகச் சொல்லுகின்றேன்- நாளைக்குள்ளாக திருத்தப்படாவிட்டால், நம்முடைய அமைச்சர் பொன்முடி அந்த விழாவில் கலந்துகொள்ள மாட்டார் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)